**செய்தி வெளியீடு எண்:077** **நாள் :4.02.2016**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இன்று (4.2.2016) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

1. லார்சன் & டவ்ப்ரோ லிமிடெட் (Larsen & Toubro Ltd.,) நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைவர் திரு.எஸ்.என். சுப்ரமணியன் அவர்கள் 10 கோடியே 80 லட்சம் ரூபாய்.

2. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் திரு.ஆர். கோடீஸ்வரன் அவர்கள், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிப் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 4 கோடியே 18 லட்சத்து 82 ஆயிரத்து 12 ரூபாய்.

3. ஐடிபிஐ (IDBI) வங்கியின் முதன்மை பொது மேலாளர் மற்றும் மண்டல தலைவர் (தெற்கு) திரு. ரபிநாராயன் பாண்டா அவர்கள் 1 கோடியே 25 லட்சம் ரூபாய்.

4. திருச்சிராப்பள்ளி, பாரத மிகுமின் நிறுவனத்தின் (BHEL) செயல் இயக்குநர் திரு.எஸ். கோபிநாத் அவர்கள், பாரத மிகுமின் நிறுவனப் பணியாளர்களின் ஒரு நாள் சம்பளத் தொகையான 1 கோடியே 63 லட்சத்து 27 ஆயிரத்து 230 ரூபாய்.

5. பாங்க் ஆப் இந்தியா வங்கியின் செயல் இயக்குநர் திரு. ஆர்.ஏ. சங்கர நாராயணன் அவர்கள் 1 கோடி ரூபாய்.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக மொத்தம் 18 கோடியே 87 லட்சத்து 9 ஆயிரத்து 242 ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இன்று (4.2.2016) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு இதுவரை வழங்கப்பட்ட தொகை 338 கோடியே 77 லட்சத்து 73 ஆயிரத்து 503 ரூபாயாகும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 4.2.2016